மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: (அ) சென்னைத் துறைமுகத்தின் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தது பற்றி அரசு அறியும். சென்னை துறைமுகத்தில் ஏற்படும் எல்லாவிதமான தொழில் தகராறுக்கும் சம்பந்தப் பட்ட அரசு மத்திய அரசு. ஆனால் இந்த வேலை நிறுத்தத்தினால் வர்த்தகமும் தொழிலும் நடை பெறாமல் முழுவதும் நின்றுவிட்டதா என்பது பற்றிய தகவல் எதுவும் இல்லை.

(இ) சென்னை கப்பல்தளத் தொழிலாளர் சங்கத்தைச் சேர்ந்த 2,000 தொழிலாளர்களும் சென்னை துறைமுகத்தில் உள்ள கடல் துறையைச் சேர்ந்த 1,300 தொழிலாளர்களும் 1970-71-க்கான தங்களது பூரிப்பூதியக் கோரிக்கையை வலியுறுத்தி முறையே 9—8—71-லும் 27—8—71-லும் வேலை நிறுத்தம் செய்தனர்.

(உ) தொழிலாளர் நல உதவி ஆணையாளர் (மத்திய பிரிவு) தொடங்கி வைத்த பேச்சுவார்த்தையின் பயனாக 3—9—1971-ல் இரு தரப்பினரிடையேயும் ஓர் உடன்படிக்கை ஏற்பட்டதைத் தொடர்ந்து தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தைக் கைவிட்டு, அன்றே வேலைக்குத் திரும்பினர்.

திரு. என். டென்னிஸ்: மாநில அரசு துறைமுக நல தொழிலாளர் போர்டு ஒன்றை அமைத்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: தனிக் கேள்வி போடவேண்டும்.

திரு. கே. டி. கே. தங்கமணி: சென்னை துறைமுகத்தில் நடந்த வேலை நிறுத்தம்—சம்பள போர்டு தீர்ப்பு சரியாக அமல்படுத்தப்படவில்லை, மத்தியஸ்தத்திற்கு விட்ட பிறகும் அமல்படுத்தப்படவில்லை என்ற காரணத்தினால்தான் வந்தது என்பதை அரசு அறியுமா என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: அதற்கான தகவல் இல்லை. தனிக் கேள்வி போடவேண்டும்.

Industrial disputes in Tamil Nadu

*9 *Q.*—THIRU K. T. K. THANGAMANI: Will the Hon. the Minister for Labour be pleased to state—

(*a*) number of disputes referred for adjudication after report under 12 (4) of the Industrial Disputes Act during 1970;

(*b*) the nature of disputes not referred for adjudication during the said period; and

(*c*) the number of cases which have been disposed of in six months?

THE HON. THIRU N. V. NATARAJAN: (*a*) Number of disputes referred for adjudication after report under 12 (4) Industrial Disputes Act during 1970—670.

(*b*) Number of disputes not referred for adjudication during 1970—318

(*c*) Number of cases which have been disposed of in six months—664.

திரு. கே. டி. கே. தங்கமணி: 1970-ஆம் ஆண்டிலே ஆயிரம் டிஸ்ப்யூட்டுகள் அரசாங்கத்திற்கு வந்திருந்தும்கூட முந்நூறுக்கும் அதிகமான கேஸ்கள் எந்த முடிவுக்கும் அனுப்பப்படாமல் இருக்கிறதே, அந்தமாதிரியான நிலைமை சென்ற ஆண்டிலும் இருந்ததா என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: தனியாகக் கேள்வி போட வேண்டும்.

சீரணிப்படையில் பெண்கள்

* 10 வினா—திரு. பி. எஸ். மணியன்: மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஒவ்வொரு வட்டாரத்திலும், முழுவதும் பெண்களையே கொண்ட சீரணிப் படை அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: இல்லை.

திரு. பி. எஸ். மணியன்: சீரணிப்படையின் நோக்கம் முழுமையாக ஈடேற வேண்டுமென்றால் கிராமங்களில் பெண்களையே இந்தப் படையில் சேர்த்துப் பயிற்சி அளிக்க வேண்டியது அவசியம். பரிட்சார்த்தமாகவாவது சில வட்டாரங்களில் பெண்களைக் கொண்டே இந்தப் படைகளை அமைக்க அரசு ஆலோசிக்குமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: சீரணிப் படையில்—சென்னையைப் பொறுத்தவரை 100 பெண் உறுப்பினர்கள் இருக்கிறார்கள். பெண்கள் இந்தச் சீரணிப்படையில் சேர 30 வயதுக்கு மேற்பட்டவர்களாக இருக்க வேண்டும் என்பது விதி. முப்பது வயதுக்கு மேற்பட்ட பெண்கள் இந்தச் சீரணிப்படையில் சேர்ந்து பணியாற்ற அதிகமான அளவில் முன்வரவில்லை. பெண்களைக் கொண்டே சீரணிப்படையை அமைக்கும் உறுப்பினருடைய அந்த எண்ணத்தைச் சமயம் வாய்க்கும்பொழுது பரிசீலனை செய்யலாம்.

Housing schemes for Harijans

*11. Q.—Thiru N. DENNIS: Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state—

(a) whether it is a fact that the Union Government have come forward to finance the housing constructions for Harijan Colonies in this State; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: (அ) ஆம்.

(இ) மாநிலத்திட்டவரம்பில் அரிசனங்களுக்கு வீடுகட்டித் தரும் திட்டத்திற்கான மத்திய அரசின் நிதி உதவி மாநிலத்திட்டம் முழுமைக்கும் மொத்த மானியமாகவும் மொத்த கடனாகவும் விடுவிக்கப்படுகிறது. துப்புரவுப் பணிபுரியும் அரிசனங்களுக்கு வீடுகட்டித்தரும் திட்டம் மத்திய அரசின் ஆதரவுள்ள (Centrally sponsored) திட்டம். இத்திட்டத்தின் கீழ் செலவிடப்படும் தொகையில் மத்திய அரசின் நிதி உதவி 50 சதவிகிதம் ஆகும்.